சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS.261/2022

2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் நாள் புதன்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.எம்.சித்ரா, தலைமைஎழுத்தர் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூவரசன் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | ஜெயமணி | ஜாதி | |
| கிராமம் | கீழ் அரசம்பட்டு | சமயம் | |
| தாலுக்கா | வேலூர் | வயது | |

22.11.2023 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 16.08.2019 தேதியிட்ட அசல் கிரைய ஒப்பந்தபத்திரம் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.04.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.2.** அஞ்சலக ரசீது **வா.சா.ஆ.3.** 05.08.2011 தேதியிட்ட அசல் செட்டில்மெண்ட் பத்திரம் **வா.சா.ஆ.4.**